வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 26.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

அரசியல் சாசன தினமான இன்று புதுடெல்லியில் நடைபெற்ற, அரசியல் சாசனத்தின் முன்னுரையை வாசிக்கும் நிகழ்வுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தலைமை ஏற்றார்.

விமான எஞ்சின்களை பழுது பார்த்துப் பராமரிக்க, Safran நிறுவனத்தால் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ள அதி நவீன வசதிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

அபூர்வக் கனிமங்களின் வெப்பக் கலவை மூலம், உயர்திறன் காந்தங்களை தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க, 7 ஆயிரத்து 280 கோடி ரூபாய் செலவிலான திட்டம் ஒன்றை, மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வரும் 29 ஆம் தேதி தொடங்க உள்ள காசி தமிழ் சங்கமத்தை ஒட்டி, தமிழகத்தில் இருந்து 7 சிறப்பு ரயில்கள், வாரணாசிக்கு இயக்கப்பட உள்ளன.

அரசியல் சாசன தினம் 1 (10)

அரசியல் சாசன தினமான இன்று புதுடெல்லியில், சம்விதான் சதன் எனும் பழைய நாடாளுமன்ற கட்டிடத்தின் மைய மண்டபத்தில் நடைபெற்ற, அரசியல் சாசனத்தின் முன்னுரையை வாசிக்கும் நிகழ்வுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தலைமை ஏற்றார். நம் அனைவருக்கும் தேசிய அடையாளம் அளிப்பதே அரசியல் சாசனம் தான்

என்று அவர் கூறினார். **காலனியாதிக்க** மனப் போக்கில் இருந்து விடுபட்டு, தேசியவாதப் பார்வையுடன் நாட்டை முன்னெடுத்து செல்வதில், நமக்கு வழிகாட்டும் ஆவணமாகத் திகழும் அரசியல் சாசனம் காரணமாகவே, இந்திய நாடாளுமன்றம், உலக நாடுகளுக்கு முன் மாதிரியாக உயர்ந்து இருப்பதாக அவர் குறிப்பிட்டார். விழா குறித்து கூடுதல் விவரங்கள்..........

**(வாய்ஸ்)**

*அரசியல் சாசன தினம்* 2 (15)

**(வாய்ஸ்)**

அரசியல் சாசன தின விழாவில், குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் பேசுகையில், விடுதலைக்குப் பாடுபட்ட கோடிக்கணக்கான இந்தியர்களின் ஒட்டுமொத்த கனவுகள், அறிவு மற்றும் தியாகத்தின் வடிவமே, அரசியல் சாசனம் என்றார். **இப்போதும்-எப்போதும் இந்தியா ஒரே நாடு** என்பதே, அரசியல் சாசனத்தின் அடிப்படை ஆன்மா என்றும், அவர் குறிப்பிட்டார்.

நாடு, அரசியல் சாசனத்தை வழிகாட்டியாகக் கொண்டே, நல்லாட்சி மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான புதிய பயணத்தில் நடைபோட்டு வருவதாக, மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, தமது உரையில் கூறினார். அரசியல சாசனத்தை, எழுத்திலும், உணர்விலும் முழுமையாக பின்பற்றினால், 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா, முன்னேறிய நாடாக மேம்பட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின் போது, தெலுங்கு, மலையாளம், ஒடியா, பஞ்சாபி, நேபாளி, உள்ளிட்ட 9 மொழிகளில், அரசியல் சாசனத்தின் முன்னுரையை, குடியரசு தலைவர் வெளியிட்டார்.

மோடி கடிதம்" (15)

1949 ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய அரசியல் சாசனம் இயற்றப்பட்ட வரலாற்று நிகழ்வை நினைவு கூர்ந்து, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டு மக்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். நாட்டை, முன்னேற்ற பாதையில் தொடர்ந்து வழிநடத்துவதுவதே நமது அரசியல் சாசனம் தான் என்றும், வளர்ச்சியடைந்த இந்தியா ஒன்றை உருவாக்குவதில், மக்கள் அனைவரும், அரசியல் சாசன கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். தம்மைப் போன்றவர்கள், சாதாரண பின்னணியில் இருந்து நாட்டின் உயரிய பதவிகளுக்கு மேம்பட முடிந்திருப்பதற்கு அரசியல் சாசனமே காரணம் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் அம்பேத்கர் உட்பட அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களுக்கு பிரதமர் தமது கடிதத்தில் புகழஞ்சலி செலுத்தி உள்ளார். வந்தே மாதரம் தேச பக்தி பாடலின் 150 ஆம் ஆண்டு உள்ளிட்ட காரணங்களால், இவ்வாண்டு அரசியல் சாசன தினம், இன்னும் சிறப்பு பெறுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

மோடி-விமானம் (15)

போயிங், ஏர்பஸ் உள்ளிட்ட விமானங்களில் பயன்படுத்தப்படும் அதிநவீன LEAP எஞ்சின்களை பழுது பார்த்துப் பராமரிக்க, பிரெஞ்ச் பன்னாட்டு நிறுவனமான, Safran நிறுவனத்தால் சுமார் ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில், ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய வசதிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். உலகின் மிகப் பெரிய உள்நாட்டு விமான போக்குவரத்து சந்தையாக திகழும் இந்தியாவில், புதிய யுகம் ஒன்றை தொடங்கும் வகையில் இன்றைய தினம் அமைந்திருப்பதாக அவர் கூறினார். விமானப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் புதுமையாக்கம் மற்றும் முதலீடுகள் வரவேற்கப்படுவதாகவும், இதற்காகவே

உற்பத்தியுடன் இணைந்த பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்கள், செயல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவில் முதலீடு செய்பவர்களை, இந்தியா வெறும் முதலீட்டாளர்களாக அன்றி, முன்னேறிய இந்தியாவிற்கான சக படைப்பாளிகளாவே கருதுவதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

*திரைப்பட விழா* (15)

கோவாவில் நடைபெறும் 56 ஆவது **இந்திய சர்வதேச திரைப்பட விழாவின்** 7 ஆம் நாளான இன்று, சினிமா ரசிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற பல்வேறு திரைப்படங்களும், திரைத்துறை நிபுணர்கள் மூலமான **மாஸ்டர் கிளாஸ்** நிகழ்வுகளும் இடம் பெற்றன. அறிமுக இயக்குநர்களின் சிறந்த படங்களில் ஒன்றாக, மெக்சிகோ நாட்டில் தயாரிக்கப்பட்ட, The Devil Smokes திரைப்படம், முதன் முறையாக திரையிடப்பட்டது. Forensics - ஸ்பானிய திரைப்படம் உள்ளிட்ட திரைப்படங்கள், ஆசிய அளவில் முதன் முறையாக திரையிடப்பட்டன. இயக்குநர் ராம்கோபால் வர்மாவின் **ஷிவா**, மோகன்லால் நடித்த **கிரீடம்** உள்ளிட்ட திரைப்படங்களும், இன்றைய **திரையிடல் பட்டியலில்** இடம் பெற்றுள்ளன. திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக, இன்று நடைபெற்ற **வட்டமேசை கூட்டத்தில்**, தேசிய விருது பெற்ற பத்திரிக்கையாளர் **பரத்வாஜ் ரங்கன்**, திரைப்பட விமர்சகர் **எலிசபெத் கெர்** உள்ளிட்டோர் கலந்து கொண்டு, திரைத் துறையில், திரை விமர்சனத்தின் பங்களிப்பு, வேகமாக மாறி வருவது குறித்து விவாதித்தனர்.

*அமைச்சரவை 1* (7)

அபூர்வக் கனிமங்களின் வெப்பக் கலவை மூலம், தொழிலகத் தேவைகளுக்கான சக்தி வாய்ந்த நிரந்தர காந்தங்களை தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க, 7 ஆயிரத்து 280 கோடி ரூபாய் செலவிலான

திட்டம் ஒன்றை, மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று மாலை புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். இந்த ஊக்குவிப்பு திட்டம் குறித்து கூடுதல் விவரங்கள்........

**(வாய்ஸ்)**

*அமைச்சரவை* 2 (12)

**(வாய்ஸ்)**

மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப் பட்டுள்ள, புதிய ஊக்குவிப்பு திட்டத்தினால், ஆண்டுக்கு 6 ஆயிரம் டன் அளவில் நிரந்தர காந்தங்களைத் தயாரிக்கும் வசதிகள், இந்தியாவில் உருவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. அபூர்வ கனிமங்களின் வெப்பக் கலவைகளின் மூலமான நிரந்தர காந்தங்கள், மின்சார வாகன உற்பத்தி, புதுப்பிக்க வல்ல எரிசக்தி, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அதிகமாக தேவைப்படுவதும், இத்தகைய காந்தங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதால், இறக்குமதி செலவு கணிசமாக குறைந்து, சுய சார்பு மேம்படுவதுடன், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதும், குறிப்பிடத் தக்கது. இந்தியாவின் நிகர கார்பன் புகை வெளியீட்டை, 2070 ஆம் ஆண்டிற்குள், பூஜ்யமாக குறைக்கும் இலக்கை எட்டவும், இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*காசி தமிழ் சங்கமம்* (17)

காசி தமிழ் சங்கமம், வரும் 29 ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதை ஒட்டி, கன்னியாகுமரி, சென்னை மற்றும் கோவையில் இருந்து வாரணாசிக்கு, 7 ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இதில் முதலாவது ரயில் வரும் 29 ஆம் தேதி கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு, டிசம்பர் 1 ஆம் தேதி வாரணாசி சென்றடையும். மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், விவசாயிகள், கலைஞர்கள்,

மகளிர் சுய உதவிக்குழுவினர், மத்திய அரசின் திட்டங்களின் பயனாளிகள், சாஸ்திரியர் இசைக் கலைஞர்கள், கோவில் அர்ச்சகர்கள் என பல்வேறு பிரிவுகளில் பங்கேற்பாளர்களுக்கான பெயர் பதிவு நடைமுறைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இம்முறை, தமிழகத்தில் இந்தி மூலம் மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் சுமார் 50 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒழுங்காற்றுப் பயிற்சிக்குப் பின்னர், வாரணாசியில் மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்க, அனுப்பி வைக்கப்பட உள்ளனர். இந்த குறுகிய கால திட்டத்தின் கீழ், பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தின் தமிழ் துறையின் சுமார் ஆயிரத்து 500 மாணவர்கள் தமிழ் கற்க உள்ளனர். இம்முறை காசி தமிழ் சங்கமத்தின் ஒரு பகுதியாக, தென்காசி முதல் காசி வரை, அகஸ்தியர் பயணமும் இடம் பெற உள்ளது.

*புதுச்சேரி சாசனம்* (8)

இன்று அரசியல் சாசன அமைப்பு தினத்தை ஒட்டி, புதுச்சேரி ராஜ்நிவாசில் நடந்த நிகழ்ச்சியில், அரசியல் சாசன தின உறுதி மொழியை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வாசிக்க, ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் உறுதி மொழி ஏற்றனர். தலைமை செயலகத்தில், தலைமைச் செயலர் தலைமையில் அரசியல் சாசன உறுதி மொழி ஏற்கப்பட்டது. ஏனாமில், மண்டல நிர்வாக அதிகாரி திரு அங்கித் குமார் அரசியல் சாசன உறுதி மொழியை வாசிக்க, பல்வேறு அரசு துறைகளின் தலைவர்கள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.

*வானிலை* (13)

இன்று வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், அதற்கு அடுத்த 48 மணி நேரத்தில், இது மேலும் வலுவடைந்து, வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர பகுதிகளை

நோக்கி நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, வரும் டிசம்பர் 2 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இன்றைய தினம், நெல்லை, குமரி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராமநாதபுர மாவட்டம் பாம்பனில், 8 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது,

கிரிக்கெட் (7)

ஆடவர் கிரிக்கெட்டில் இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, குவகாத்தியில் நடைபெற்ற, இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியின் கடைசி நாளான இன்று தென்னாப்பிரிக்க அணி 408 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி உள்ளது. இப்போட்டியில், 549 ரன் எனும் வெற்றி இலக்கை நோக்கி இன்று இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இந்திய அணி, 140 ரன்னுக்கு ஆட்டமிழந்து, தோல்வியடைந்தது.

முர்மு-ஒடிசா (11)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாளை, ஒடிசா சட்டமன்றத்தில் உரையாற்ற இருக்கிறார். சட்டமன்றத்தின் குளிர் கால கூட்டத் தொடர் தொடங்கும் நாளில், குடியரசு தலைவரின் உரை இடம் பெற உள்ளது. ஒடிசா சட்டமன்றத்தில் குடியரசு தலைவர் ஒருவர் உரையாற்றுவது இதுவே முதல் முறை என்பதும், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இரண்டாயிரமாவது ஆண்டில், ஒடிசா சட்டமன்ற உறுப்பினராகத் தான், தமது அரசியல் வாழ்வை தொடக்கினார் என்பதும்

குறிப்பிடத் தக்கது. குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி, புவனேஷ்வரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன. ஒடிசா சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த போது அவர் பணிபுரிந்த அறை, முற்றிலுமாக புதுப்பிக்கப் பட்டுள்ளது.